General } vnzoplan@yahoo.com
Web } www.vnzone.lk
Fax } 024 205 1911
வவுனியா வடக்கு வலயக்கல்வி அலுவலகம்
වවුනියාව උතුර කලාප අධ්‍යාපන කාර්යාලය
VAVUNIYA NORTH ZONAL EDUCATION OFFICE
Director } 024 205 1910, 0777 252 022, zdevnorth@gmail.cor
A9 வீதி, புளியங்குளம் | A9 මාර්ගය, පුලියංකුලම | A9 Road, Puliyankulam

எனது இல / My No. NP/43/20/2/4/GA-03/PR/Va-13
தங்களது இல / Your No.
திகதி / Date 2022.11.08

வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
.....

வடக்கு மாகாணத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள்,

அதிபர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

எமது வவுனியா வடக்கு வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் குறித்த தினங்களில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்படவுள்ளது.

இல	பாடசாலையின் பெயர்	பாடசாலை வகை	வெற்றிடம் ஏற்பட்ட / ஏற்படவுள்ள திகதி
01	வ/பட்டிக்குடியிருப்பு அ.த.க.பா	II	2022.10.17
02	வ/பூம்புகார் கண்ணகி வித்தி	II	2023.01.01
03	வ/கிடாச்சூரி கருவேப்பன்குளம் அ.த.க.பா	II	2023.01.01

எனவே, மேற்படி பாடசாலைகளின் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமான இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தங்கள் வலயப் பாடசாலைகளிலுள்ள பொருத்தமான தகைமையுடைய இலங்கை அதிபர் சேவையினைச் சேர்ந்தவர்களுக்கு இவ் அறிவித்தலினை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

விண்ணப்பங்கள் யாவும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரினால் 2022.01.20 ஆம் திகதி வெளியிடப்பட்ட "அதிபர் பதவி வெற்றிடம் நிரப்புதல்" சுற்றுநிருப இலக்கம் 2022/01 இற்கு அமைவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. மேற்படி பாடசாலைகள் யாவும் வகை II ஐச் சேர்ந்த பாடசாலைகள் என்பதனால் இலங்கை அதிபர் சேவை தரம் II ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2. வேறு மாவட்டங்களில் வெற்றிடம் காரணமாகவும், சேவையின் தேவை கருதியும் நியமிக்கப்பட்ட அதிபர் தரத்திலுள்ளோரும் குறைந்தது 03 வருட சேவையைப் பூர்த்தி செய்தோரும் வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.
3. விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் ஆகக் குறைந்தது 03 வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 03 வருடங்களுக்கு கடமையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் **இறுதித் திகதி 2022.11.16** ஆம் திகதியாகும்.
6. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் தொடர்பிலும், காலதாமதமாகக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் தொடர்பிலும், உரிய தொடர்பாடல் முறையினூடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பிலும் எவ்வித மேலதிக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படமாட்டாது.
7. விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்விற்கு தோற்றுதல் வேண்டும்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
வவுனியா வடக்கு.

பிரதி:

01. பொதுக்கோவை